UNIVERSITY OF PERADENIYA

பேராதனைப் பல்கலைக்கழகம்

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

தொடர் தொலைக்கல்வி நிலையம்

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2018

பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி) - 2018 டிசெம்பர்

# HINDU CULTURE I / இந்துப்பண்பாடு I (HCG I)

## இந்து சமய வரலாறு - இந்தியா, இலங்கை

## History of Hinduism – India and Sri Lanka

(மூன்று மணித்தியாலம்)

இவ்வினாத்தாளில் எல்லாமாக 08 வினாக்கள் உள்ளன

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

01. இந்துசமய வரலாற்றில் சிந்துவெளி நாகரிகம் பெறும் முக்கியத்துவம் பற்றி ஆராய்க.

02. வேதகால வழிபாட்டு முறைகளின் சிறப்பம்சங்கள் பற்றி விபரிக்குக.

03. “வடஇந்திய இந்துசமய வரலாற்றில் குப்தர்காலம் பொற்காலமாகும்.” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை விளக்குக.

04. சோழர்கால கட்டிடக்கலையினைப் பிரதிபலிப்பனவாக பொலனறுவைக்கால கோயில்கள் அமைந்துள்ளவாற்றினைப் பற்றி விபரிக்குக.

05. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மதப்பிசாரத்திலிருந்து இந்துசமயத்தை மீட்டெடுப்பதற்கு சுதேசிய இந்து சமயத்தினர் மேற்கொண்ட வழிமுறைகள் பற்றி ஆராய்க.

ம.ப.பா.

06. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்துசமய வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த நிறுவனங்களுள் இராமகிருஷ்ண மிஷன் பெறும் முக்கியத்துவம் பற்றிப் பரிசீலிக்குக.

07. பின்வருவோருள் ஒருவரைத் தெரிவு செய்து அவர் சைவ சமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணி பற்றி விபரிக்குக.

I. விவேகானந்தர்

II. மெய்கண்டார்

III. சுவாமி விபுலானந்தர்

IV. இந்து போட் சு. இராசரத்தினம்

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்குச் சிறுகுறிப்பு வரைக.

I. தலபுராணங்கள்

II. முன்னேஸ்வரம்

III. இந்துக் கலாசாரத் திணைக்களம்

IV. இந்துசாதனம்

V. பிருகதாரணிய உபநிடதம்

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2018
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2018 டிசெம்பர்

**HINDU CULTURE II / இந்துப்பண்பாடு –II (HCG –II )**

**இந்து தத்துவ சிந்தனைகள்**

**Hindu Religious and Philosophic Thoughts**

இவ்வினாத்தாளில் எல்லாமாக **எட்டு (08)** வினாக்கள் உள்ளன

எவையேனும் **ஐந்து (05)** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

**(மூன்று மணித்தியாலம்)**

---

01. இந்து தத்துவ மரபின் தோற்றுவாயாக, வேதங்களைக் கூறமுடியுமோ என ஆராய்க.

02. சைவசித்தாந்தம் குறிப்பிடும் பிரமாணங்களைப் பற்றி , கருத்துரை வழங்குக.

03. சங்கர வேதாந்தம் கூறும் மாயையையும், சைவசித்தாந்தம் கூறும் மாயையையும் ஒப்பிட்டு ஆராய்க.

04. சைவசித்தாந்த சாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு, குருவருள் பற்றி விளக்குக.

05. ஆன்மா பற்றியும் ஆன்ம விடுதலை பற்றியும் சைவசித்தாந்தம் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்குக.

ம.ப.பா.

**HCG –II**

06. சைவசித்தாந்த வளர்ச்சிக்கு காசிவாசி செந்திநாதையர் ஆற்றிய பங்களிப்பை ஆராய்க.

07. இந்திய தத்துவ மரபில் துவைதம் பெறும் இடத்தை மதிப்பிடுக.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

i. யோகம்

ii. பிரளாகலர்

iii. அருணந்தி சிவாசாரியார்

iv. பிராரத்துவ வினை

v. முக்திக் கோட்பாடு

UNIVERSITY OF PERADENIYA

பேராதனைப் பல்கலைக்கழகம்

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

தொடர் தொலைக்கல்வி நிலையம்

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2018

பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2018 டிசெம்பர்

**HINDU CULTURE - III / இந்துப்பண்பாடு - III (HCG III)**

**இந்துக்கலை, கட்டடக்கலை வரலாறு**

**History of Hindu Art and Architecture**

இவ்வினாத்தாளில் எல்லாமாக 09 வினாக்கள் உள்ளன

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒவ்வொரு** வினாவையேனும் தெரிவு செய்து

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

**(மூன்று மணித்தியாலம்)**

---

## பகுதி I

01. இந்துக்கலைகளின் ஊற்று மூலமாக சிந்துவெளிக்காலம் அமையுமாற்றினைத் தெளிவுபடுத்துக.

02. வாதாபி சாளுக்கியர் கட்டடக்கலையின் பொது அம்சங்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

03. திராவிடக் கட்டடக்கலையின் முக்கிய பண்புகளை யாதாயினும் ஓர் இந்துக் கோயிலை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

ம.ப.பா.

## பகுதி II

04. "தமிழகச் சிற்பக்கலை வரலாற்றில் திருப்புமுனையினை ஏற்படுத்தியவர்கள் பல்லவர்களாவர்." இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

05. அனுராதபுர காலத்துக்குரியதாக அபயகிரி வளாகத்தில் கிடைக்கப்பெற்ற ஆண்-பெண் இணைந்த சிற்பத்தினைக் கலாவிமர்சனம் செய்க.

06. தஞ்சைப்பெருங்கோவில் ஓவியங்களின் சமய, சமூக முக்கியத்துவத்தினைத் தெளிவுபடுத்துக.

## பகுதி III

07. சுவாமி விபுலானந்த அடிகள் தமிழிசை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

08. இலங்கையில் இந்துக்கலைகளைப் பேணிப் பாதுகாப்பதில் ஆலயங்கள் பெறும் முக்கியத்துவத்தினை உமது பிரதேச ஆலயமொன்றினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

09. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.

01. நாயக்கர் கால கட்டடக்கலை
02. போதிகை
03. கிராமிய நடனங்கள்
04. நடராஜ மூர்த்தம்
05. இரண்டாம் சிவதேவாலயம்